கணபதி துணை
**பாலு. சரவண சர்மா**
பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர்- ஜோதிடர், பஞ்சாங்க கணிதக்ஞர்
எண் 9, 4வது குறுக்கு தெரு, கல்யாண் நகர், தாம்பரம், சென்னை 600 045
இல்லம்: 2226 1742 கைபேசி: 98403 69677
மின்னஞ்சல் முகவரி: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

# இந்த ஆண்டு மகாசிவராத்திரி என்று வருகிறது?

## இந்த ஆண்டு தை மாத இறுதி நாளில் (12 பிப்ரவரி 2010) வெள்ளி இரவு மகாசிவராத்திரி வருகிறது

⌘ இது பஞ்சாங்கப்பிழையா?

இல்லை

இவ்வருடம் தை மாதத்தின் கடைசி நாளில் (**12 பிப்ரவரி 2010) வெள்ளி** அன்று சிவராத்திரி வருகை பஞ்சாங்கப்படி சரியானதே.

⌘ ஆகமவிதிப்படி இவ்வருடம் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி(13.3.2010 மற்றும் 14.2.2010) மகாசிவராத்திரி என கணக்கில் கொள்ளலாமா?

மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி "பால்குன மாத" கணக்காகும், எனவே விரத சூத்திர விதிப்படி தவறு. மேலும் தை மாதத்தில் கடைசி நாளில் இரவு 20 நாழிகைக்கு பிறகே மாதம் பிறக்கிறது ஆனால் மாசி மாதத்தில் இரவு 9 நாழிகையில் பங்குனி மாதம் பிறப்பதால் ஆகம விதிப்படியும் மாசி மாத சிவராத்திரி மகாசிவராத்திரி அல்ல.

⌘ மகாசிவராத்திரி சூத்திரம்:

மாக பகுள சதுர்தசி
இரவு 15 நாழிகை (மாலை 6 மணிக்கு மேல் இரவு 12 அளவில்)

⌘ மகாசிவராத்திரி கடைபிடைக்கப்படும் கால கணக்கீடு முறை

பூர்ணசந்திரன் எந்த நட்சத்திரத்தின் ஊடாக பயணிக்கிறதோ அதுவே அந்த மாதம் ஆகும் அந்த அடிப்படையில் மகம் நட்சத்திரத்தின் வழியாக பூர்ணசந்திரன் பயணிக்கும் "மாக" மாதத்தில் மகாசிவராத்திரி கடைபிடிக்கப்படுகிறது.

⌘ தமிழ்(சௌரமான) மாதம் கணக்கீடு

தமிழ்மாதம் சூரியனின் அயனத்தை வைத்து கணக்கிடப்படுகிறது. சூரியன் ஒரு ராசியில்(30°பாகை) இருந்து மற்ற ராசிக்கு பிரவேசிக்கும் காலமே ஒரு சூரிய மாதம் ஆகும் இதை சௌரமானம் என்று வடமொழியில் அழைக்கிறார்கள்.

⌘ சந்திர(சாந்திரமான) மாதம் விளக்கம்

அமாவாசை முடிவு முதல் அடுத்த அமாவாசை முடிவு வரை ஒரு சந்திரமாதம் என்று அழைக்கப்படுகிறது. இதை வட இந்தியா, கர்நாடகா, ஆந்திரா பகுதியில் கடைபிடிக்கப்படுகிறது.

சந்திர மாதத்தின் அளவு: சராசரி: 29 நாள் 12 மணி நேரம் 44 நிமிடம்
சந்திர வருடத்தின் அளவு: 354.3672 நாட்கள்
சூரிய வருடம் – சந்திர வருட வேறுபாடு 10.89 நாள்

⌘ அதிக மாதம் ஓர் விளக்கம்

எந்த சூரிய(சௌரமான)மாதத்தில் 2 அமாவாசைகள் வருகிறதோ அந்த சூரிய(சௌரமான) மாதத்திற்கு உள்வரும் சந்திரமாதம் அதிகமாதம் என்று அழைக்கப்படுகிறது. அதிகமாதத்தில் வரும் சந்திரமாதம் கணக்கில் கொள்ளாமல் அடுத்து வரும் சந்திரமாதம் அந்த சூரிய மாதத்தின் பெயராலே நிஜசந்திர மாதம் என்று அழைக்கப்படுகிறது.

உதாரணம் வரும் 2010 விக்ருதி ஆண்டில் சித்திரைமாதத்தில் 2 அமாவாசைகள் வருவதால் அதில் வரும் "சந்திரமாதமான" வைசாக மாதம் "அதிகவைசாகம்" என்றும் அடுத்து சூரிய மாதமான வைகாசியில் வரும் சந்திரமாதம் "நிஜ வைசாகம்" என்றும் அழைக்கப்படும்.

19 வருடத்தில் 7 அதிக மாதம் வரும், சராசரியாக 2.7 வருடத்திற்கு ஒரு அதிகமாதம் வரும்

www.prohithar.com

வருடத்திற்கு 10.89 நாள் மிகுதியாகும் சந்திரமாத வேறுபாட்டை "அதிக மாதம்" துணைக்கொண்டு சமன் படுத்துவதால், 19 வருடத்திற்கு ஒருமுறை சூரிய மாதமும், சந்திரமாதமும் சமன் படுத்தப்படுகிறது அதற்கான கணக்கீடு

19 சந்திர வருடங்கள் =19 ✕ 12+7(அதிக மாதம்)✕29.5306நாள்கள் = 6939.69 நாட்கள்

19சந்திர வருடங்கள் ✕12சந்திர மாதங்கள் = 228 சந்திர மாதங்கள்
228 சந்திர மாதம் + 7 அதிகமாதம் = 235 சந்திர மாதங்கள்
235 சந்திர மாதம் ✕ 29.5306 = 6939.69 சந்திர நாள்

ஒரு சூரிய வருடம் = 365.256363 நாட்கள்
19 சூரிய வருடங்கள்(19✕365.256363) = 6939.87 சூரிய நாட்கள்
ஆக 19 வருடங்களுக்கு ஒரு முறை சந்திர, சூரிய வருடங்கள் சமமாக இருக்கும்

⌘ இதற்கு முன்னர் தைமாத இறுதியில் மகாசிவராத்திரி வந்துள்ளதா?

ஆம்.
தை மாதத்தின் கடைசி நாளில் சிவராத்திரி வந்த வருடம்
1991 பிப்ரவரி 12 செவ்வாய் கிழமை தமிழ் வருடம் பிரமோதூத வருடம் தைமாதம் 30ஆம் நாள் இரவு மஹாசிவராத்திரி வந்தது
1972 தை மாத இறுதி நாளில் மஹா பிரதோஷமும் மாசி 1ஆம் தேதி சிவராத்திரி.
1953 தை மாத இறுதி நாளில் மஹா பிரதோஷமும், மாசி முதல் நாள் சிவராத்திரியும்.

கடந்த சில வருடங்களில் மகா சிவராத்திரி வந்த நாட்கள்

| | | |
|---|---|---|
| 11 மாசி (2009) | 24 மாசி (2008) | 5 மாசி (2007) |
| 15 மாசி (2006) | 25 மாசி (2005) | 9 மாசி (2004) |

⌘ தமிழகத்தில் இதற்கு முன்னர் தைமாதத்தில் வந்த மகா சிவராத்திரி அனுசரிக்கப்பட்டதா?

ஆம். 1991 பிப்ரவரி 12 செவ்வாய் கிழமை அன்று மகாசிவராத்திரி தமிழகம் முழுவதும் பெரும்பாலான கோயில்களிலும் அனுசரிக்கப்பட்டது.

**⌘ இந்திய அரசும் - பஞ்சாங்க கணிக்கீடும்**

இந்திய அரசாங்கத்தில் இதற்க்காக ஒரு தனி வான் அறிவியல் துறை கல்கத்தாவில் உள்ளது அவர்களின் கிரக நிலை புள்ளிவிபரங்கள் தான் உலக அளவில் மிகமிக துல்லியமானது. அதன் அடிப்படையிலும் தை மாதத்தில் வரும் மகாசிவராத்திரிதான் சரியானது.

**http://www.packolkata.org**
**Positional Astronomy Centre**
Block-AQ, Plot 8, Sector – V,Salt Lake, Kolkata -91

**Office of the Director General of Meteorology**
Mausam Bhavan, Lodi Road, New Delhi – 110 003

இந்திய அரசின் வானியல் கிரக நிலை கண்காணிப்பு மையம் வருடம் தோறும் இதற்கான புள்ளிவிவரங்களை முன்னதாக புத்தகவடிவில் அளிக்கிறது (ரூ 500).
இவர்களும் ரூ 15க்கு மிக துல்லியமான தகவல்களுடன் தமிழில் பஞ்சாங்கத்தை வெளியிடுகிறார்கள்
இந்த துறைதான் பண்டிகைகளை முன்னதாக அறிவியல் மற்றும் பாரம்பரிய அடிப்படையில் கணித்து பொது விடுமுறை நாட்களை அறிவிக்கிறது.
இத்துறையில் எண்ணற்ற விஞ்ஞானிகள், வரலாற்றியலாளர்கள், பண்பாட்டுத்துறை சாரந்தவர்கள், அனைத்து மதத்தை சார்ந்த அறிஞர்கள் ஒன்று கூடி பண்டிகைகளை முடிவு செய்கிறார்கள்.

தமிழகத்தில் காஞ்சி சங்கரமடத்திலும் இதுபோல் "சதஸ்" நடத்தப்படுகிறது. இதில் தமிழகத்தில் பிரசுரிக்கப்படும் அனைத்து பஞ்சாங்கங்களின் கணிதவல்லுநர்கள் வேறுபாடுகள் இன்றி ஒன்றுகூடி கலந்து ஆலோசித்து பண்டிகைகளை முடிவு செய்கிறார்கள்.

PANCHANGAM & DHARMA SASTRA SADAS– AUGUST 2007
Kanchi Sankara mutt
**http://www.kamakoti.org/news/sadas.html**

www.prohithar.com

⌘ மீண்டும் இப்படி தை மாதத்தில் மகாசிவராத்திரி வருமா?

ஆம்.

19 வருட சுழற்ச்சியில் மீண்டும் 2029 ல் இப்படி நிகழும்

2029ஆம் ஆண்டு இந்த ஆண்டு (2010) நிகழ்ந்தது போலவே தை மாதத்தில் முதல் நாளில் அமாவாசை, கிரகணம் வரும், மாத இறுதியில் மகா சிவராத்திரி வரும்

**2029**ஆம் ஆண்டு கீலக வருடம் தை மாத பிறப்பு மற்றும் சிவராத்திரி (சென்னை நகர புவிநிலைப்படி)

| | தேதி | வாக்கியப்படி | திருக்கணிதப்படி |
|---|---|---|---|
| தை மாத பிறப்பு | 14.1.2029 ஞாயிறு | தை முதல் நாள் மதியம் 1:38 | தை முதல் நாள் காலை 9:28 |
| தை மாத முடிவு | 12.2.2029 திங்கள் | தை30 இரவு 12:30<br>(ஆங்கிலப்படி13.2.2029 அதிகாலை 00:30) | தை 30 மாலை 6:27 மணி |

2029ஆம் ஆண்டு தைமுதல் நாள் அன்று சூரிய கிரகணம் வட அமெரிக்காவில் நிகழும்

**http://eclipse.gsfc.nasa.gov/SEplot/SEplot**2001/**SE**2029**Jan**14**P.GIF**

| தமிழ் தேதி | சிறப்பு நாள் | ஆங்கில தேதி | திதி | திதி முடிவு |
|---|---|---|---|---|
| மார்கழி28 | | 12.1.2029 | தேய்பிறை திரியோதசி | 11:06 PM |
| மார்கழி29 | | 13.1.2029 | தேய்பிறை சதுர்தசி | 10:46 PM |
| தை1 | தைமாத பிறப்பு<br>தை அமாவாசை<br>தை பொங்கல்<br>சூரிய கிரகணம்<br>(வடஅமெரிக்காவில்) | 14.1.2029 | அமாவாசை | 10:54 PM |
| தை 2 | சந்திரமாதம்<br>மாக மாதம் துவக்கம் | 15.1.2029 | | |
| தை 28 | மகா பிரதோஷம் | 10.2.2029 | | |
| தை29 | மகா சிவராத்திரி | 11.2.2029 | தேய்பிறை திரியோதசி | 01:30 PM |
| தை30 | | 12.2.2029 | தேய்பிறை சதுர்தசி | 02:34 PM |
| மாசி | | 13.2.2029 | அமாவாசை | 04:01 PM |

Place : ChennaiDate : Jan 13, 2029 - Feb 14, 2029Location : 13.08, -80.27Time Zone : 5.5

www.prohithar.com

குறிப்பு: மேற்படி 2029ஆம் ஆண்டு வரும் மகா சிவராத்திரியை வேதப்பிராமணர், பஞ்சாங்க கணிதக்ஞர்கள், மடாதிபதிகள், வானியல் அறிஞர்கள் ஒன்றுகூடி விவாதித்து தேதியில் மாற்றம் ஏற்ப்படுத்தலாம். மேற்படி எனது கணிப்புகள் கால அளவுப்படி சரியானது.

⌘ ஏன் இந்த குழப்பம்?

வானியல், மாத கணக்கீடு முறைபற்றிய அறிவியல் கணக்கீடுகளை அறியாதவர்கள் அடையும் குழப்பமே.

இவர்களால் பஞ்சாங்கம் மற்றும் விரத நிர்ணயங்களை புரிந்துக்கொள்ளாததும் மிகமுக்கிய காரணம் ஆகும்

விரத நிர்ணயம் தொடர்பான பல்வேறு மூலநூல்களில், குறிப்பாக பெரிய வருஷாதி, உத்திரகாலாமிருதம், விரதாதி கால நிர்ணயம், காலவிதானம், காலப்பிரகாசிகை போன்ற நூல்களில் மிக தெளிவுடன் தரப்பட்டுள்ளது

இந்தியா முழுவதும் சிவராத்திரி எந்த குழப்பமும் இன்றி **12 பிப்ரவரி 2010 வெள்ளி** அன்று கடைபிடிக்கப்படுகிறது

⌘ எந்த பண்டிகைகள் சந்திர மாதத்தின் அடிப்படையில் வருகிறது?

மகாசிவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, ஸ்ரீராம நவமி, தீபாவளி, சரஸ்வதி பூஜை

இன்னும் பல பண்டிகைகள் சந்திரமாதத்தின் அடிப்படையில் வருகிறது

⌘ எந்த பண்டிகைகள் சூரியமாதத்தின் அடிப்படையில் வருகிறது?

பொங்கல், காரடையான் நோன்பு, ஆடிப்பெருக்கு, மற்றும் பல

**சுபம்**

© 2010. Balu. Saravana Sarma, www.prohithar.com